**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII–Code of Criminal Procedure)**

**PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS COURT, PALANI.**

**Sessions Case No.** 57/2022

**Prosecution –** PW12 / **LW13**

**Deposition of witness for : Defence**

**Court**

**Name** : **டாக்டர் திரு.அனிஷ் தாமஸ் ஜேக்கப்**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 19–11–2025

எதிரிகள் ஆஜர்

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கிறிஸ்த்துவ ஐக்கிய மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியாற்றுகிறேன். எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த டாக்டர் மோகன் அவர்களை தெரியும், அவர்கள் தற்போது எங்கள் மருத்துவமனையில் பணியாற்றவில்லை, அவர் எங்கு பணியாற்றுகிறார் என்று விபரமும் எங்களுக்கு தெரியாது, மேலும் அவரின் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். காயம்பட்ட பரமசிவத்திற்கு எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளித்திருப்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். பழனி தாடகையம்மன் கோவில் தெருவை சார்ந்த பரமசிவம் என்பவர் கடந்த 08.03.2012ல் நள்ளிரவில் 1.30 மணியளவில் எங்கள் அவசர பிரிவில் குத்துக்காயம் சம்பந்தமாக சிகிச்சை பெற வந்திருந்தார். வலப்பக்க வயிற்று பகுதியில் குத்துக்காயம் ஏற்பட்டு, குடல் வெளியே வந்திருந்தது. அதற்கு நான் உடனடியாக சிகிச்சை அளித்தபோது சிகிச்சையின் போது அவருக்கு 3 இடத்தில் குத்துக்காயம் ஏற்பட்டியிருந்தது, உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பின்னர் 15.03.2012ல் விடுவித்தோம். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று அளிக்கப்பட்டது. அந்த காயச்சான்று அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதலில் அவர் வேறு இடத்தில் முதல் உதவி சிகிச்சை பெற்று

எங்கள் மருத்துவமனைக்கு வந்ததாக துலங்குகிறது, ஆனால் எங்கு மருத்துவம் பெற்றார் என்று எங்கள் ஆவணங்களில் துலங்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

ஒருவர் கூர்மையான பொருளின் (தேங்காய் மூடி) மீது விழுந்தால் காயச்சான்றில் சொல்லப்பட்டுள்ள காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் கூர்மையான பொருளின் மீது விழுந்தால் ஏற்படும், ஆனால் தேங்காய் மூடியின் மீது விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு குறைவு. காயம் ஏற்பட்ட நபருக்கு காயம் எத்தனை மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, 1 மணி நேரம் என்று சொல்லப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல் காயம்பட்ட நபருக்கு காயம் ஏற்படவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காயச்சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காயச்சான்றில் யார் தாக்கினார் என்று குறிப்பில்லை என்றால் சரிதான்.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.19 14:12:27 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.